18th November 1963]

(*b*) This will depend on the clearance from the Government of India.

திரு. மீ. கலியாணசுந்தரம் : என்னூர், கடலூர், தூத்துக்குடி ஆகிய பகுதிகளில் வைக்க உத்தேசித்திருக்கும் நிலையங்கள் தனியார் துறையிலா, அல்லது பொதுத் துறையிலா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எலக்ட்ரிசிட்டி போர்ட் தான்.

கல்பாக்கம் அணு மின்சார நிலையம்

* 242 **கேள்வி.—திரு. செ. கோ. விசுவநாதன் :** கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கல்பாக்கத்தில் அணு மின்நிலையம் அமைக்கப்படுவதினால் அவ்வூரை சுற்றியுள்ள கிராமங்கள் காலி செய்யப்படுமா ?

(இ) அப்படியானால், அக்கிராமவாசிகளுக்கு வேறு இடங்களில் குடியிருப்பு வசதி செய்துதர உத்தேசமுண்டா?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) These matters will be considered at the appropriate stage of the land acquisition proceedings which have been initiated by Government in respect of lands required around Kalpakkam.

* 243 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the present stage of the proposal to locate a Nuclear Power Station near Kalpakkam in Chingleput district ;

(*b*) whether final approval has been obtained from the Central Government ; and

(*c*) if so, whether this scheme would be included in the Third Five-Year Plan ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) The Government of India announced in December 1962 that when a decision is taken to establish a third nuclear power station in the country, it is proposed to locate it at Kalpakkam. No further communication has been received from them.

(*b*) & (*c*) Do not arise.

திரு. மீ. கலியாணசுந்தரம் : நிலம் ஆர்ஜிதம் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். மத்திய அரசாங்கம் இன்னும் அனுமதி கொடுக்கவில்லை என்று சொன்னால் நில ஆர்ஜிதம் செய்வதின் நோக்கம் என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மத்திய அரசாங்கம் இதை மூன்றாவது திட்டத்தில் சேர்ப்பதா அல்லது நாலாவது திட்டத்தில் சேர்ப்பதா என்பதுபற்றி அவர்கள் முடிவு செய்யவில்லை. மூன்றாவது நியூக்ளியர் பவர் ஸ்டேஷன், அணு சக்தி நிலைய அமைப்பதாக இருந்தால் அது கல்பாக்கத்தில்தான் என்று சொல்லி விட்டார்கள். முன்கூட்டியே அதற்காக நடவடிக்கைகள் எடுத்து

வைத்திருந்தால் அவர்கள் முடிவு செய்தவுடன் இதை நிறைவேற்ற சௌகரியமாக இருக்கும். முன்கூட்டி நடவடிக்கைகள் எடுக்கா விட்டால் முடிவு எடுத்த பிறகு இரண்டு ஆண்டுகளாகும், நிலம் எடுக்க நடவடிக்கைகள் எடுக்க. ஆகவேதான் முன் கூட்டியே நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

உடலுறுப்பிழந்தோர்க்கு உதவித் தொகை

* *244* **கேள்வி.—திரு. எஸ். ராமசாமி :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

முதியோர் உதவித் தொகை அளிப்பதுபோல் குறைந்த வயதுள்ள அங்கஹீனர்களுக்கு (குருடர், கைகால் இல்லாதவர் களுக்கு) உதவித் தொகை வழங்க உத்தேசமுண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சென்னை முதியோர் பென்ஷன் திட்டம் சம்பந்தமான தற்போதைய விதிகளின்படி, அங்கஹீன மடைந்த அனாதைகளுக்குப் பென்ஷன் கொடுப்பதற்கான வயது வரையறை 60-ம், அதற்கு மேலும் என்றும், அங்கஹீனமற்ற அனாதைகளுக்கு 65 என்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அறுபது வயதுக்குக் குறைந்த அங்கஹீன அனாதைகளுக்குப் பென்ஷன் கொடுக்கும் திட்டம் எதுவும் இப்போது அரசாங்கத்தின் ஆலோ சனையில் இல்லை.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : முதியோர் உதவித் தொகையை விட ஓய்வுபெற்ற ஆரம்ப ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படுகிற பென் ஷன் தொகை மிகவும் குறைவாக இருக்கிறது. அதையும் சர்க்கார் புனர் ஆலோசனை செய்ய முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முதியோர் பென்ஷன் திட்டத் திற்கும் ஆரம்ப ஆசிரியர்களின் பென்ஷனுக்கும் சம்பந்தம் இல்லை. ஓய்வு பெற்ற ஆரம்ப ஆசிரியர்களாக இருந்தாலும் சரி அல்லது வேறு யாராக இருந்தாலும் சரி அவர்கள் முதியோர் பென்ஷன் திட்டத்தின் கீழ் வரவேண்டுமென்றால் வரலாம்.

புலவர் கா. கோவிந்தன் : முதியோர் உதவித் தொகை அரசாங் கம் எதிர்பார்த்ததற்கு மேல் செலவாவதால் குறிப்பிட்ட அளவு இவ்வளவுதான் வரவேண்டுமென்று மாவட்ட கலக்டர்களுக்கும் ஆர்.டி.ஓ. க்களுக்கும் தனியாக ஏதாவது உத்தரவு இந்த அரசாங்கத்திலிருந்து அனுப்பப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு ஒன்றும் உத்தரவு அனுப்பப்படவில்லை. மனுக்களைப் பரிசிலனை செய்து சாங்ஷன் செய்யவேண்டியிருக்கிறது. 65,000-க்கு மேல் இப்போது பெற்று வருகிறார்கள். ஒரு வருடத்திற்கு ரூ. 1 கோடி 30 லட்சம் செலவா கிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஆசிரியர்கள் பென்ஷனைப் பற்றிக் கேட்ட கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதில் கூறாமல் இருந்திருந் தால் இந்த உப கேள்வியை நான் கேட்டிருக்க முடியாது.